| பொருள் எண்.27 | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 19.03.2025 தேதிய ஆய்வு கூட்டத்தில், நகராட்சியால் பராமரிக்கப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) கழிவுநீரினை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வுக்குட்படுத்தி அதன் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளார். எனவே, இந்நகராட்சியால் பராமரிக்கப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) கழிவுநீரினை 1.Raw Sewage water (7 Parameters), 2. Treated Sewage Water (7 Parameters) 3. Sludge (17 Parameters) மேற்கண்ட கூறுகளில் TUV India Testing Service என்ற நிறுவனத்தின் மூலம் ஆய்வுக்குட்படுத்திட, அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>** மேற்காணும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>(ந.க.எண். 929/2025/எச்1)</u>** | **தீர்மானம் எண். 115**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண்.28 | இந்நகராட்சியால் பராமரிக்கப்படும் மூன்று நுண்ணுயிர் உர மையங்கள், இரண்டு வளமீட்பு மையங்களில் குப்பைகளை பிரித்தெடுக்கும் பணிக்கு 15 தூய்மை பணியாளர்கள் பொது சுகாதார பணியின் அவசியம் கருதி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 2024-2025-ஆம் ஆண்டு நிர்ணயம் செய்த தினகூலி ஊதியம் அடிப்படையில், பணி மேற்கொள்ள, இந்நகர் மன்ற தீர்மான எண்.412, நாள்.05.12.2024-ல் அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் நடைபெற்று வருகிறது. தற்சமயம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 2025-2026-ஆம் ஆண்டு நிர்ணயம் செய்த தினக்கூலி ஊதிய விகிதத்தின் அடிப்படையில் 01.04.2025 முதல் 30.07.2025 வரை நான்கு மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்திட, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1. மேற்காணும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் அவர்கள் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் ஏற்கனவே, பணியாளர்களை வழங்கி வரும் நிறுவனத்திற்கு 01.04.2025 முதல் 30.07.2025 வரை நான்கு மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**<u>(ந.க.எண். 3705/2024/எச்1)</u>** | **தீர்மானம் எண். 116**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.29 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை ஆர்.பி.சிவம் நகரில் உள்ள நுண்ணுர மையத்தில் சேகரிக்கப்பட்டு, அரியலூர் அல்ட்ரா சிமெண்ட் தொழிற்சாலைக்கு, இந்நகராட்சி வாகனம் (TN 50 U 9435) காம்பாக்டர் மூலம் பிளாஸ்டிக் கழிவுகள் அனுப்பப்பட்டு வருகிறது. மேற்கண்ட வாகனம் அரியலூர் செல்லும் வழியில் அவ்வபோது பழுதுகள் ஏற்பட்டு, பாதியிலேயே செல்ல முடியாத சூழ்நிலைகள் ஏற்படுவதால், உடனடியாக மாற்றம் செய்து தனியார் வாகனத்தின் மூலம் பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு செல்லப்பட்டது. எனவே, தனியார் நிறுவனத்தின் மூலம் வாடகைக்கு அமர்த்தி பணிகள் மேற்கொண்டமைக்கு அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,20,000/- வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண். 117**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலககுறிப்பு</u>** 1. பொது சுகாதார பணியின் முக்கியத்துவத்தினை கருதி பிளாஸ்டிக் கழிவுகளை அப்புறப்படுத்திட பகவதி ஏஜென்சீஸ் இந்தியா பிரைவேட் லிமிட் என்ற நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம். 2. இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்.30 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவுகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி S.R. எண்டர்பிரைசஸ், திருச்சி என்ற நிறுவனத்திற்கு 01.06.2023 முதல் பணி உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இந்நிறுவனத்துடன் செய்யப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின்படி, மூன்று வருடத்திற்கு, ஆண்டுக்கு ஒருமுறை செயல்திறன் அடிப்படையில் காலநீட்டிப்பு செய்திட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதியில் குறிப்பிட்டுள்ளவாறும், இதுதொடர்பாக தெரிவிக்கப்படும் திருத்தங்கள் மற்றும் வழிக்காட்டுதல் பின்பற்றி செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி ஓராண்டு பணி நிறைவு பெற்று 01.06.2024 முதல் 31.05.2025 வரை (இரண்டாம் ஆண்டு) இந்நகர் மன்ற தீர்மான எண்.207, நாள்.05.07.2024-ல் காலநீட்டிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தற்சமயம், 31.05.2025-ஆம் தேதியுடன் பணிக்காலம் முடிவடைவதால், மேலும் ஓராண்டிற்கு (மூன்றாம் ஆண்டு) 01.06.2025 முதல் 31.05.2026 வரை காலநீட்டிப்பு செய்திடவும், காலநீட்டிப்பு மேற்கொள்ளும் போது வழங்கப்பட்டு வரும் விலைவிகிதம் அடிப்படையில் கூடுதலாக 10% சேர்த்து வழங்கிட ஒப்பந்த உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலும், தொகை சேர்த்து வழங்கவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>** S.R எண்டர்பிரைசஸ், 69 N/1, கீழக்கடை வீதி, முத்து நகர், துறையூர், திருச்சி – 621 010 என்ற நிறுவனத்தின் மூலமாக பணிகள் மேற்கொள்ள தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மற்றும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><u>(ந.க.எண். 413/2023/எச்1)</u> | **தீர்மானம் எண். 118** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.31 | இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வார்டு பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால், வாய்க்கால்களில் செடி, கொடிகள், மண்மேடுகள் கழிவுகள் சூழ்ந்துள்ள இடங்களில் இயந்திரங்கள் செல்ல முடியாத பகுதிகளில் பொது மக்களுக்கு இடையூறு இல்லாதவாறு வாய்க்கால்களை தூர் வாரும் பணிக்கு 15 நபர்களை பொது சுகாதார பணியின் அவசியம் கருதி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 2024-2025-ஆம் ஆண்டு நிர்ணயம் செய்த | **தீர்மானம் எண். 119** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | தினகூலி ஊதியம் அடிப்படையில், பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் நடைபெற்று வருகிறது. தற்சமயம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 2025-2026-ஆம் ஆண்டு நிர்ணயம் செய்த தினக்கூலி ஊதிய விகிதத்தின் அடிப்படையில் 01.06.2025 முதல் 31.12.2025 வரை ஆறு மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்திட, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>** 1. மேற்காணும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் அவர்கள் நிர்ணயித்துள்ள தினக்கூலி அடிப்படையில் ஏற்கனவே, பணியாளர்களை வழங்கி வரும் நிறுவனத்திற்கு 01.06.2025 முதல் 31.12.2025 வரை ஆறு மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>(ந.க.எண். 3705/2024/எச்1)</u> | |
| பொருள் எண்.32 | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 50 BU 2832 கழிவுநீர் வாகனம் மற்றும் TN 50 BU 2838 ஜெட்ராடு வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் செய்து பழுதுகள் நீக்கம் செய்திட ஸ்ரீ வெற்றி கமர்ஷியல் ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிட், தஞ்சாவூர் என்ற நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.35000/-க்கு மன்றம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>** மேற்காணும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பொது சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>(ந.க.எண்.1464 /2025/எச்1)</u> | **தீர்மானம் எண்.120**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.33 | இந்நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள 33 வார்டுகளிலும், குடியிருப்பு பகுதிகளில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரித்து நுண்ணுர மையத்திற்கு கொண்டு செல்ல தேவைப்படும் மூன்று சக்கர வாகனங்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 07.02.2025 அன்று உள்ளூர் விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டத்தில் 17.02.2025 அன்று கீழ்க்கண்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. | **தீர்மானம் எண். 121**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>விலைப்புள்ளி நிறுவனம்</th><th>விலைப்புள்ளி<br>(தொகை )</th></tr>
<tr><td>1</td><td>பகவதி ஏஜென்சீஸ் இந்தியா<br>பிரைவேட் லிமிட்,<br>4/9, பாரதிதாசன் நகர்,<br>அசேஷம், மன்னார்குடி.</td><td>ஒரு மூன்று சக்கர வாகனம்<br>ரூ.36300/-</td></tr>
<tr><td>2</td><td>காவ்யா எண்டர்பிரைசஸ்,<br>ருக்மணிப்பாளையம் தெரு<br>மன்னார்குடி.</td><td>ஒரு மூன்று சக்கர வாகனம்<br>ரூ.40200/-</td></tr>
<tr><td>3</td><td>குமரன் சைக்கிள் மார்ட்<br>43, மேலராஜ வீதி, மன்னார்குடி.</td><td>ஒரு மூன்று சக்கர வாகனம்<br>ரூ.38400/-</td></tr>
</table>
வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் உள்ள பகவதி ஏஜென்சீஸ் இந்தியா பிரைவேட் லிமிட், கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியினை ஏற்கலாம். அதற்கான செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>
<u>அலுவலககுறிப்பு</u> குறைவான விலைப்புள்ளியான பகவதி ஏஜென்சீஸ் இந்தியா பிரைவேட் லிமிட், நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.36300/-யை மன்றம் ஏற்கலாம் மற்றும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>
<u>(ந.க.எண். 727/2025/எச்1)</u>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.34</td>
<td>நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள நான்கு Airtel FTTH இண்டர்நெட் இணைப்பு சந்தா 30.06.2025 உடன் முடிவடைவதால், 01.07.2025 முதல் மேலும், ஆறு மாதம் புதுப்பித்திடவும் அதற்கான கட்டணம் ரூ.45,000/- Airtel முகவர் SGS Digital Video System(p) Ltd., நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலககுறிப்பு:-</u> மன்றம் அனுமதிக்கலாம். செலவினம் நகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.1603/2025/அ4)</td>
<td>தீர்மானம் எண். 122<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.35</td>
<td>இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள புகை தெளிப்பான் (Fogging Machine Portable) இயந்திரம் மற்றும் சாக்கடை மருந்து தெளிப்பான் இயந்திரம் பழுதுகள் ஏற்பட்டு, இயக்கமுடியாத நிலையில் உள்ளது. எனவே, எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை கருத்தில் கொண்டு புதியதாக புகை தெளிப்பான் இயந்திரம்-3, சாக்கடை மருந்து தெளிப்பான் இயந்திரம்-4</td>
<td>தீர்மானம் எண். 123<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>கொள்முதல் செய்திட அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,50,000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலககுறிப்பு</u><br>1. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>(ந.க.எண். 1596 /2025/எச்1)</u></td><td></td></tr>
<tr><td>பொருள் எண்.36</td><td>இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் தொற்று நோய் கிருமி நாசினி பொருட்கள் இருப்பில் குறைவாக உள்ளதால் எதிர்வரும் மழைக்காலங்களில் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், தற்காலிக பேருந்து நிலையம், கடைவீதிகள், மார்க்கெட் பகுதிகள் மற்றும் பொது கழிப்பிடங்கள் தினசரி சுத்தம் செய்து கிருமி நாசினி தெளிக்க வேண்டியுள்ளதாலும், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி 1, நீர்த்த சுண்ணாம்பு - 20000 கி, 2. பிளிச்சிங் பவுடர் – 5000 கி, 3. கருப்பு பினாயில் – 1000 லி கிருமி நாசினி பொருட்கள் ஒப்பந்தப்புள்ளி பெற்று வாங்கி கொள்ளவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.5,00,000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலககுறிப்பு:-</u><br>1. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>(ந.க.எண். 1417 /2025/எச்1)</u></td><td>தீர்மானம் எண். 124<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண்.37</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 11 வரையிலான பகுதியில் மழைநீர் வடிகால் சீரமைப்பு மற்றும் பராமரிப்பு பணியை ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியின்கீழ் மேற்கொள்ள 13.05.2025 அன்று Online முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><table><tr><th>வ. எண்.</th><th>நிறுவனம் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr><tr><td>1.</td><td>திரு. S. மோகன்,<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி,</td><td>மதிப்பீட்டை விட 0.02 % குறைவு</td></tr></table></td><td>தீர்மானம் எண். 125<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 2. | M/s SK Infra Projects, ஒப்பந்தநிறுவனம், மன்னார்குடி. | மதிப்பீட்டைவிட 1.72 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:-** மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S.மோகன், மன்னார்குடி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

---

**பொருள் எண்.38**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6ல் உள்ள குழந்தைகள் வளர்ச்சி மைய கட்டிடம் பராமரிப்பு பணியை ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள 14.05.2025 அன்று Online முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனம் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1. | திரு. T. நாகராஜன், ஒப்பந்ததாரர், மன்னார்குடி | மதிப்பீட்டை விட 0.02 % குறைவு |
| 2. | M/s காவியா எண்டர்பிரைசஸ், ஒப்பந்த நிறுவனம், மன்னார்குடி. | மதிப்பீட்டைவிட 0.40 % அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.நாகராஜன், மன்னார்குடி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 126**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண்.39**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.29 பெத்த பெருமாள் கோவில் குளத்திற்கு தென்புறம் தடுப்பு சுவர் அமைத்து, படித்துறை கட்டும் பணிக்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு-</u>**

அனுமதிக்கலாம். செலவினங்களை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மானம் எண். 127**
அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| பொருள் எண்.40 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28 பாரதிதாசன் பள்ளி எதிர்புறம் உள்ள சுடுகாட்டினை புணரமைக்கும் பணிகள் மேற்கொண்டதற்கான கூடுதல் செலவீனம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு-</u>**<br>அனுமதிக்கலாம். செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். | **தீர்மானம் எண். 128**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.41 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மோர்குளம் அருகில் புதிதாக போர்வெல் அமைத்திட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு-</u>**<br>அனுமதிக்கலாம். செலவினங்களை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். | **தீர்மானம் எண். 129**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.42 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 கண்காணிப்பு கேமிரா (CCTV Camera) பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**:- அனுமதிக்கலாம். செலவினங்களை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மானம் எண். 130**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.43 | இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் சிறு மின்விசை பம்புகள் (Mini Power Pump), மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள் மற்றும் சர்வீஸ் ஒயர் சின்டெக்ஸ் டேங்க் ஆகியவற்றிற்கு பராமரிப்பு மற்றும் பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**:- மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மானம் எண். 131**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.44 | இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் ஆழ்துளை கிணறு, நீர்மூழ்கி மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள் மற்றும் சர்வீஸ் ஒயர் சின்டெக்ஸ் டேங்க் ஆகியவற்றிற்கு பராமரிப்பு மற்றும் பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண். 132**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு</u>**:- மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| பொருள் எண்.45 | இந்நகராட்சியில் கடந்த 58 ஆண்டு காலமாக 22,23,25,32 மற்றும் 33 ஆகிய வார்டுகளில் செயல்பட்டு வரும் பழைய பாதாள சாக்கடை திட்டத்தில் அமைக்கப்பட்ட குழாய்கள் மற்றும் Machine Hole-களில் அடிக்கடி ஏற்படும் அடைப்புகள், குழாய் கசிவுகளை சரி செய்ய வெளிக்கொணர்வு முறையில் (Out sourcing) பணியாளர்களை கொண்டு மேற்படி பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**:- மேற்கண்ட செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 133**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.46 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வார்டுகள் வரையிலான பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள், கசிவுகள் மற்றும் அடைப்புகளை உடனுக்குடன் பழுது நீக்கிடவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், குடிநீர் தொட்டிகள் சுத்தம் செய்திடவும் மற்றும் தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் தினசரி செய்திடவும், தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**:- அனுமதிக்கலாம். செலவினங்களை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மானம் எண். 134**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.47 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வார்டுகள் வரையிலான பகுதிகளில் 13 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் 3 எண்ணிக்கை தரைமட்ட தொட்டிகள் மூலமாக பாதுகாக்கப்பட்ட மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தினசரி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளில் இரவு மற்றும் பகல் நேர காவலர் பணிக்கு போதுமான பணியாளர் இல்லாத நிலையில் தற்சமயம் காவலர், பூங்கா காவலர் மற்றும் பவுண்டன் கிளீனர் ஆகியோர்கள் மாற்றுப்பணி (Working Arrangements) அடிப்படையில் பணி பார்க்கப்பட்டு வருகிறது. மேலும் கூடுதல் பணியாளர்கள் வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்த அடிப்படையில் நகர்மன்ற தீர்மான எண்.8 நாள்.14.03.2025ன்படி மார்ச் 2025 முதல் பணி பார்க்கப்பட்டு வருகிறது. ஒப்பந்தகாலம் ஆகஸ்ட்-2025 உடன் முடிவடையவுள்ளதால், 14 நபர்களுக்கு திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.4001/2025/ஈ1 நாள்.08.04.2025ன் விலை விகித பட்டியல்படி நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.520/- வீதம் 14 நபர்களை (செப்டம்பர் -2025 முதல் பிப்ரவரி -2026 வரை) | **தீர்மானம் எண். 135**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | வெளிக்கொணர்வு முறையில் பணியமர்த்திக்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.14.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| பொருள் எண்.48 | இந்நகராட்சி பகுதியினை கடந்து இரயில் நிலையம் மற்றும் பைபாஸ் வழியாக செல்பவர்களுக்கு இரவு நேரங்களில் போதிய வெளிச்சமின்மையால் இரயில் நிலையம் செல்லும் சாலையில் கூடுதலாக மின் விளக்குகள் அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** மேற்காணும் செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.. | **தீர்மானம் எண். 136**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.49 | இந்நகராட்சி:க்குட்பட்ட எண், 1 முதல் 33 வரை உள்ள வார்டு பகுதியில் விடுப்பட்ட இடங்களில் 20 வாட்ஸ், 30 வாட்ஸ் மின் விளக்குகள் பொருத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.8.60 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம். செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மானம் எண். 137**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.50 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 –ல் கே,எஸ்.எஸ் பூங்கா மற்றும் வார்டு எண்.23-ல் உள்ள சுகாதார சந்திற்கு மின் விளக்குகள் பொருத்தும் பணிக்கு கூடுதல் செலவினத்தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகி.றது<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம். செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மானம் எண். 138**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.51 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23-ல் அமைந்துள்ள நல்லான் குட்டைகரையில் மின் விளக்குகள் பொருத்தும் பணிக்கு உத்தேச செலவினம் தொகை ரூ.2.10 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம். செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மானம் எண். 139**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண்.52 | நகராட்சி அலுவலகத்தில் மின் விநியோகம் பராமரிப்பு பணி, ஜெனரேட்டர் மற்றும் ஏ.சி பராமரிப்பு பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம். செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் | **தீர்மானம் எண். 140**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண். 53 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33-ல் இயங்கிவரும் கசடு கழிவு நீர் சுத்தகரிப்பு (FSTP) நிலையத்திற்கு புதிதாக 3Hp மோட்டார் மற்றும் கோனபெருமாள் கோவில் தெருவில் இயங்கி வரும் பழைய பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் உந்து நிலையத்திற்கு புதிதாக 7.5Hp மோட்டார் வாங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம். செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் | **தீர்மானம் எண். 141**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண். 54 | இந்நகராட்சியின் பொதுசுகாதார பிரிவின் பயன்பாட்டில் உள்ள B.O.V டிரை சைக்கிள்கள், பாப்காட் மற்றும் ஜேசிபி இயந்திரங்கள் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டதற்கு உத்தேச செலவினம் ரூ.2.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம். செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் | **தீர்மானம் எண். 142**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண். 55 | மாவட்ட சுற்றுச்சுழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திருவாரூர் அவர்களால் 2024-2025 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 ஆர்.பி.சிவம் நகர் கசடு கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடத்தில் இரண்டு முறை நிலத்தடி நீர் ஆய்வு செய்யப்பட்டதற்கு ரூ.42,160/-ஐ மாவட்ட சுற்றுச்சுழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திருவாரூர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம். செலவினங்களை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மானம் எண். 143**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண். 56 | திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு – 33 ஆர்.பி. சிவம் நகரில் நகரளவு வார்டு 2 , பழைய பிளாக் 56, புதிய பிளாக் 70, பழைய நகரளவை எண். 3364, புதிய நகரளவை எண். 7 -ல் 2140 சதுரமீட்டர் பரப்பளவில் பாதாள சாக்கடை திட்டத்திற்கு சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் | **தீர்மானம் எண். 144**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>குடிநீர் வழுங்கல் துறை அரசு ஆணை எண். 93, நாள். 12.07.2023-ன் படி இந்நகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் ரூ. 258/- கோடி செலவில் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. நிர்வாக நலன் கருதி ஏற்கனவே திட்டமிட்ட இடத்தில் உந்துதல் நிலையம் அமைப்பதற்கு ஏதுவான சூழ்நிலை இல்லாததால் சுத்திகரிப்பு நிலையம் அருகிலே உந்துதல் நிலையம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. உத்தேச சுத்திகரிப்பு நிலையம் அமைய உள்ள இடத்தில் நடுவே மன்னார்குடி நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட முழுமை திட்டத்தில் (Master Plan), விரிவான மேம்பாட்டு திட்டம் 7 (Detailed Development Plan) ல் F1, F1 சாலை 40அடி அகலத்தில் செல்கிறது. மேற்படி திட்ட சாலை திட்டமிடப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டதாலும், தற்போது பாதாள சாக்கடை திட்டத்திற்கு இடம் வழங்குவது அத்தியவாசியம் என்பதாலும் மேற்கண்ட F1, F1 சாலை 40அடி சாலையை நீக்கம் செய்ய வேண்டியது அத்தியவாசியம் என்பதால் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண். 57</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 அந்தோணியார் கோவில் தெரு காளியம்மன் கோவில் அருகில் பொதுக்கழிப்பிடம் அமைக்கும் பணியை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள 14.05.2025 அன்று Online முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனம் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு. T.நாகராஜன்,<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.01 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு. S.முத்துக்குமரன்,<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி</td><td>மதிப்பீட்டைவிட 1.47 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:-</u> மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.நாகராஜன், மன்னார்குடி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மானம் எண். 145<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்.58</td>
<td>
இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 அண்ணாமலைநாதர் குளம் அருகில் உள்ள ஈமக்கிரியை மண்டபம் பழுதுபார்க்கும் பணியை ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியின்கீழ் மேற்கொள்ள 13.05.2025 அன்று Online முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனம் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு. AP ஏஜென்ஸிஸ்<br>ஒப்பந்ததாரர், மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட<br>0.02 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.M. இளையராஜா,<br>ஒப்பந்ததாரர்,மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டைவிட<br>0.49 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:-</u> மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. AP ஏஜென்ஸிஸ், மன்னார்குடி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்
</td>
<td>தீர்மானம் எண். 146<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.59</td>
<td>
இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 கல்கி பூங்காவில் சங்கு ஒலிப்பானை மாற்றி வேறு இடத்தில் அமைக்கும் பணியை ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியின்கீழ் மேற்கொள்ள 13.05.2025 அன்று Online முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனம் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>M/s பகவதி ஏஜென்ஸிஸ்<br>இந்தியா பிரைவேட் லிட்,<br>ஒப்பந்த நிறுவனம்,<br>மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டை விட<br>0.05 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s காவியா எண்டர்பிரைசஸ்,<br>ஒப்பந்த நிறுவனம்,<br>மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டைவிட<br>2.22 % அதிகம்</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண். 147<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>1. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s பகவதி ஏஜென்ஸிஸ் இந்தியா பிரைவேட் லிட், மன்னார்குடி ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண். 60</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 சத்தியமூர்த்தி மேட்டுத்தெருவில் உள்ள வாய்க்காலுக்கு தடுப்பு சுவர் அமைக்கும் பணியை ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள 14.05.2025 அன்று Online முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனம் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு. T. நாகராஜன்,<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி</td><td>மதிப்பீட்டை விட<br>0.01 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s காவியா<br>எண்டர்பிரைசஸ்,<br>ஒப்பந்த நிறுவனம்,<br>மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டைவிட<br>0.29 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:-</u> மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.நாகராஜன், மன்னார்குடி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மானம் எண். 148<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண். 61</td>
<td>இந்நகராட்சி வார்டு எண்.4 ல் உள்ள சுடுகாட்டின் தெற்கு பகுதியில் தடுப்பு சுவர் அமைக்கும் பணியை ரூ.5.75 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியின்கீழ் மேற்கொள்ள 13.05.2025 அன்று Online முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.</td>
<td>தீர்மானம் எண். 149<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| வ.எண். | நிறுவனம் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
| --- | --- | --- |
| 1. | M/s SK Infra Projects, ஒப்பந்த நிறுவனம், மன்னார்குடி. | மதிப்பீட்டை விட 0.01 % குறைவு |
| 2. | திரு.S.மோகன், ஒப்பந்ததாரர், மன்னார்குடி, | மதிப்பீட்டைவிட 0.59 % அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s SK Infra Projects, மன்னார்குடி ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
| --- | --- | --- |
| பொருள் எண்.62 | இந்நகர் பகுதியில் 1 முதல் 33 வார்டு பகுதியில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை நுண்ணுர் உர மையத்திற்கும் மற்றும் மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கும் அனுப்பப்படுகிறது மீதம் உள்ள கழிவுகளை டெப்போ ரோட்டில் உள்ள கொட்டுவதற்கு, ஏற்கனவே அங்கு உள்ள கழிவுகளை அகற்றி, இடத்தினை சுத்தம் செய்து வாகனங்கள் செல்ல ஏதுவாக ஜே.சி.பி மற்றும் ஹிட்டாச்சி வாகனங்கள் கொண்டு பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகி.றது<br>**<u>அலுவலககுறிப்பு</u>** 1. பொது சுகாதார பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>(ந.க.எண். 1665 /2025/எச்1)</u> | **தீர்மானம் எண். 150**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.63 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30 திருமூலர் நகரில் உள்ள பூங்காவிற்கு நடைபாதை, சுற்றுசுவர் அமைத்து மேம்படுத்தும் பணிக்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு-</u>** அனுமதிக்கலாம். செலவினங்களை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். | **தீர்மானம் எண். 151**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண்.64 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 –ல் புதிதாக கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த நவீன பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள 217 கடைகள் மற்றும் முதல் தளத்தில் இரண்டு மினி கூட்டரங்குகளுக்கு மின் இணைப்பு பெறுவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் பதிவு கட்டணம் செலுத்துவதற்கு உத்தேச செலவீனம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு-</u>** அனுமதிக்கலாம். செலவினங்களை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். | **தீர்மானம் எண். 152**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.65 | இந்நகராட்சிக்குட்பட்ட தேரடி தற்காலிக பேருந்து நிலையம் மற்றும் கீழராஜவீதி உழவர் சந்தை அருகில் தடுப்பு வேலி அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம். செலவினங்களை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மானம் எண். 153**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.66 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 கீழராஜவீதி குட்டைக்கரை தொடக்கப்பள்ளி வளாகத்தில் சமையற்கூடம் மற்றும் சேமிப்பு அறை (Store Room) மேற்கூரைகளில் தட்டு ஓடு பதித்தல் பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>அனுமதிக்கலாம். செலவினங்களை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மானம் எண். 154**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.67 | இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் TN 50 U 2836, வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கான பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>மேற்காணும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 155**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண். 68 | இந்நகராட்சி பகுதியினை கடந்து இரயில் நிலையம் மற்றும் பைபாஸ் சாலை செல்லும் பாமணி ஆற்றுப்பாலத்தில் மேற்குபுறம் அமைந்திருந்த பிள்ளையார் கோவிலை அறநிலையத்துறை அனுமதியுடன் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதால், அவ்விடத்தில் போக்குவரத்திற்கு ஏதுவாக சாலையினை சீரமைத்திடவும், பாலத்தில் கைப்பிடி சுவர் அமைத்திடவும், அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம். செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.. | **தீர்மானம் எண். 156**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண். 69 | இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட கோனபெருமாள் கோவில் தெருவில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கதொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்வது பொதுமக்கள் தேவைக்கு போதுமானதாக இல்லாமையால், பொதுமக்கள் நலன் கருதி கூடுதலாக போர்வெல் ஒன்று அமைத்திட உத்தேச செலவீனம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு-</u>**<br>அனுமதிக்கலாம். செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 157**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண். 70 | மன்னார்குடி நகராட்சி வார்டு-1, பிளாக்-70, புதிய நகரப்புல எண்-18, 24/7, 19/4 பழைய நகரளவை எண். 461, 459Part, 460 Part, 427 ல் அமைந்துள்ள 4308.20ச.மீ பரப்பளவில் அடங்கிய மனைப்பிரிவுக்கு மனைப்பிரிவு உரிமையாளராகிய திரு.கோ.பாலசுப்பிரமணியன், த/பெ.கோவிந்தராஜ், 1/127, முனைதிரியர் தெரு, பைங்காநாடு, மன்னார்குடி தாலுக்கா, அவர்கள் நகர் ஊரமைப்பு துறையில் விண்ணபம் செய்துள்ளதன் பேரில் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களால் ROC.No.21075/2024/TVR/2024/TCP நாள்.04.04.2024 வாயிலாக சாலை அமைப்பு வரைபடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு துறையின் மனைப்பிரிவு வரைபடத்தின்படி, உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டிய பொது உபயோக இடம், சாலைகள், மூலை முடுக்குகள் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் ஆகியவைகள் நகராட்சிக்கு இனாம் சாசனம் ஆவணம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது (இனாம் சாசன அசல் ஆவண எண்-2873/2024 நாள்:04.06.2024). மேற்கண்டவாறு உள்ள மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களால் ROC.No.21075/2024/TVR நாள்.18.06.2024 அன்று தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ளவாறு அடிப்படை வசதிகள் நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டதென நகராட்சி பொறியாளர் ஆய்வு செய்து சான்று அளித்துள்ளார். | **தீர்மானம் எண். 158**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | எனவே, மேற்கண்டவாறு நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது உபயோக இடம், சாலைகள், மூலை முடுக்குகள் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களை ஏற்று உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களால் ம.வ/மா.ந.ஊ.அ (TVR) SWP எண்.45/2024 என எண்ணிட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு, இறுதி அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்-1511/2025/எப்1)** | |
| பொருள் எண். 71 | மன்னார்குடி நகராட்சி வார்டு-1, பிளாக்-70, புதிய நகரப்புல எண்-14/2, 15/2 பழைய நகரளவை எண். 465, 463 ல் அமைந்துள்ள 3819ச.மீ பரப்பளவில் அடங்கிய மனைப்பிரிவுக்கு மனைப்பிரிவு உரிமையாளராகிய திரு.டி.எஸ். ராமலிங்கம், த/பெ.சுப்பையா, 6, கோபாலசமுத்திரம் வடக்கு வீதி, மன்னார்குடி நகரம், அவர்கள் நகர் ஊரமைப்பு துறையில் விண்ணப்பம் செய்துள்ளதன் பேரில் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களால் ROC.No.34563/2024.TVR/2024/TCP நாள்.12.11.2024 வாயிலாக சாலை அமைப்பு வரைபடத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு துறையின் மனைப்பிரிவு வரைபடத்தின்படி, உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டிய பொது உபயோக இடம், சாலைகள், மூலை முடுக்குகள் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் ஆகியவைகள் நகராட்சிக்கு இனாம் சாசனம் ஆவணம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது (இனாம் சாசன அசல் ஆவண எண்-6737/2024 நாள்:19.12.2024). மேற்கண்டவாறு உள்ள மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களின் கடித ந.க.எண். 34563/TVR/2025/TCP ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ளவாறு அடிப்படை வசதிகள் நல்ல முறையில் செய்து முடிக்கப்பட்டதென நகராட்சி பொறியாளர் ஆய்வு செய்து சான்று அளித்துள்ளார்.<br>எனவே, மேற்கண்டவாறு நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது உபயோக இடம், சாலைகள், மூலை முடுக்குகள் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களை ஏற்று உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களால் | **தீர்மானம் எண். 159**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | ம.வ/மா.ந.ஊ.அ TVR(SWP) எண்.32/2025 என எண்ணிட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு, இறுதி அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்-1501/2025/எப்1) | |
| பொருள் எண்.72 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 பூக்கொல்லை ரோட்டில் இயங்கி வரும் பொதுவிநியோக அங்காடி கட்டிடம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கூடுதல் செலவீனம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**- அனுமதிக்கலாம். செலவினம் நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 160**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.73 | 15வது நிதிக்குழு மான்யம் 2023-24 மற்றும் 2024-25ன்கீழ் மேற்கொள்ளப்படும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை ஒப்பந்தப்புள்ளி மலர் மற்றும் தமிழ், ஆங்கில தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் செலுத்தக்கோரி Bright Advertising, Chennai நிறுவனத்திடமிருந்து கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br><br>வ.எண். \| பட்டியல் / நாள். \| தொகை ரூ.<br>1. \| 252 / 2025-26 நாள்.02.08.2025 \| 75,758<br>2 \| 297 / 2025-26 நாள்.21.08.2025 \| 39,375<br><br>மேற்கண்ட விளம்பர கட்டண தொகையை Bright Advertising, Chennai நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு:- மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மானம் எண். 161**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.74 | இந்நகராட்சியில் அம்ரூட் மித்ரா திட்டத்தின்கீழ் பணிபுரியும் பூங்கா பராமரிப்பில் ஈடுபடுத்தப்படும் இரண்டு மகளிர் சுய உதவிக்குழு 8 உறுப்பினர்களுக்கு புடவை & ஜாக்கெட், தொப்பி, அரிவாள், பூட்டு சாவி, ஓஸ், டேபிள், வார்கோல், மைக், கையுறை, கருக்கு அரிவாள், வாளி, கத்திரிக்கோல், மண்வெட்டி, களைகொத்து, நோட் மற்றும் எழுது பொருட்கள் ஆகியவைகளை கொள்முதல் செய்து வழங்கும் பணியினை 25.05.2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் | **தீர்மானம் எண். 162**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனம் பெயர் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | M/s பகவதி ஏஜென்ஸிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், 4/9, பாரதிதாசன் நகர், அசேஷம், மன்னார்குடி. | ரூ.39490 |
| 2. | M/s காவியா எண்டர்பிரைசஸ், மன்னார்குடி. | ரூ.40810 |

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s பகவதி ஏஜென்ஸிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், மன்னார்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கவும், மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

பொருள் எண். 75

இந்நகராட்சி அலுவலகத்தில் இயங்கிவரும் TN 50BU 1774 வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்வதற்கு மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட டீலர் திருச்சியில் உள்ள M/s சிவா ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினரிடமிருந்து விலைப்பட்டியல் ரூ.7,384/-ற்கு வரப்பெற்றுள்ளது. அதன்படி, மேற்படி வாகனத்தை பழுதுநீக்கம் செய்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.7,384/-ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி திருச்சியில் உள்ள M/s சிவா ஆட்டோ மொபைல்ஸ்

**தீர்மானம் எண். 163**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் வாகனத்தை பழுதுநீக்கம் செய்ய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| பொருள் எண்.76 | இந்நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள 33 வார்டுகளிலும், குடியிருப்பு பகுதிகளில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரித்து நுண்ணுர மையத்திற்கு கொண்டு செல்ல தேவைப்படும் மூன்று சக்கர வாகனங்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 21.03.2025 அன்று உள்ளூர் விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டத்தில் 04.04.2025 அன்று கீழ்க்கண்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.<br><br>**வ.எண்** — **விலைப்புள்ளி நிறுவனம்** — **விலைப்புள்ளி (தொகை )**<br>1 — பகவதி ஏஜென்சீஸ் இந்தியா பிரைவேட் லிமிட், 4/9, பாரதிதாசன் நகர், அசேஷம், மன்னார்குடி. — ஒரு மூன்று சக்கர வாகனம் ரூ.36300/-<br>2 — தீ சிட்டி சைக்கிள் மார்ட், தாலுக்கா ஆபிஸ் ரோடு, மன்னார்குடி. — ஒரு மூன்று சக்கர வாகனம் ரூ.38000/-<br>3 — அன்னை மாதா சைக்கிள் மார்ட், 9, தாமரை குளம் வடக்கரை, மன்னார்குடி. — ஒரு மூன்று சக்கர வாகனம் ரூ.42000/-<br><br>வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் உள்ள பகவதி ஏஜென்சீஸ் இந்தியா பிரைவேட் லிமிட், கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியினை ஏற்கலாம். அதற்கான செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br><br>**அலுவலககுறிப்பு**<br>1. குறைவான விலைப்புள்ளியான பகவதி ஏஜென்சீஸ் இந்தியா பிரைவேட் லிமிட், நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.36300/-யை மன்றம் ஏற்கலாம் மற்றும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பணி உத்தரவு மற்றும் பட்டியல் வழங்கியதற்கும் | **தீர்மானம் எண். 164**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>(ந.க.எண். 727 /2025/எச்1)</u></td><td></td></tr>
<tr><td>பொருள் எண்.77</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில், தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடர் வரும் மார்ச் 14, 2025 அன்று துவங்கி நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் நிகழ்வினை அனைத்து தரப்பினரும் அறியும் வகையில் நகராட்சி பொதுமக்கள் கூடும் பகுதிகளில் தலா இரண்டு இடங்களிலும், நகராட்சி பகுதியில் தலா ஒரு இடத்திலும் LED திரை அமைத்து அறிந்து கொள்ளும் வகையில் உரிய ஏற்பாடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது.<br><br>அதன்படி தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடர் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதை பொதுமக்கள் அறியும் வகையில் நகராட்சி பொதுமக்கள் கூடும் பகுதிகளில் தலா இரண்டு இடங்களிலும், நகராட்சி பகுதியில் தலா ஒரு இடத்திலும் நிழற்பந்தல், ஒலிப்பெருக்கி மற்றும் குடிநீர் வசதி ஆகிய வசதிகள் ஏற்பாடு செய்ய 10.03.2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனம் பெயர்</th><th>தொகை (ரூ.)</th></tr>
<tr><td>1.</td><td>திரு.R.V.கண்ணன்,<br>டிஜிட்டல் வீடியோ சிஸ்டம்ஸ்,<br>மன்னார்குடி.</td><td>49,500</td></tr>
<tr><td>2.</td><td>ரேஷ்மா டெக்கரேசன் சென்டர்,<br>6, தெப்பகுளம் மேல்கரை,<br>மன்னார்குடி.</td><td>49,950</td></tr>
</table>
<br>அலுவலகக்குறிப்பு:- மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.R.V..கண்ணன், மன்னார்குடி என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கவும், மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண். 165<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் எண்.78</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில், தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடர் வரும் மார்ச் 14, 2025 அன்று துவங்கி நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் நிகழ்வினை அனைத்து தரப்பினரும்</td><td>தீர்மானம் எண். 166<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

அறியும் வகையில் நகராட்சி பொதுமக்கள் கூடும் பகுதிகளில் தலா இரண்டு இடங்களிலும், நகராட்சி பகுதியில் தலா ஒரு இடத்திலும் LED திரை அமைத்து அறிந்து கொள்ளும் வகையில் உரிய ஏற்பாடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது.

அதன்படி தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடர் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதை பொதுமக்கள் அறியும் வகையில் நகராட்சி பொதுமக்கள் கூடும் பகுதிகளில் தலா இரண்டு இடங்களிலும், நகராட்சி பகுதியில் தலா ஒரு இடத்திலும் LED திரை மற்றும் இருக்கை வசதிகள் ஏற்பாடு செய்ய 10.03.2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனம் பெயர் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | திரு.R.V.கண்ணன்,<br>டிஜிட்டல் வீடியோ சிஸ்டம்ஸ்,<br>மன்னார்குடி. | 48,600 |
| 2. | ரேஷ்மா டெக்கரேசன் சென்டர்,<br>6, தெப்பகுளம் மேல்கரை,<br>மன்னார்குடி. | 49,850 |

**அலுவலகக்குறிப்பு:-** மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.R.V..கண்ணன், மன்னார்குடி என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கவும், மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண். 79

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதத்தில், நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு Ms Office Word, Ms Office Excel, MS Office MS Office Powerpoint, Mail Operating போன்ற கணினி பயிற்சி வழுங்க தெரிவிக்கப்பட்டது.

அதன்படி இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு Ms Office Word, Ms Office Excel, MS Office MS Office Powerpoint, Mail Operating போன்ற கணினி பயிற்சியினை வழங்க 01.04.2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

**தீர்மானம் எண். 166**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td>
வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனம் பெயர்</th><th>ஒரு நபருக்கு மூன்று தினங்களுக்கு தொகை (ரூ.)</th></tr>
<tr><td>1.</td><td>M/s Sri Sai Venkateswara Educational & Charitable Trust, Thuraiyur, Trichy.</td><td>ரூ.1500 + GST</td></tr>
<tr><td>2.</td><td>M/s Vanchi Infotech, Thuraiyur, Trichy.</td><td>ரூ.1690 + GST</td></tr>
<tr><td>3.</td><td>M/s Senthur Murugan Infotech, Udayarpalayam, Thammampatti.</td><td>ரூ.1750 + GST</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு:- மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s Sri Sai Venkateswara Educational & Charitable Trust, திருச்சி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கவும், மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண். 80</td>
<td>
அம்ரூட் மித்ரா திட்டத்தின்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட ஆர்.பி.சிவம் நகர் மற்றும் கல்கி பூங்கா உள்ளிட்ட 8 பூங்காவில் மரக்கன்றுகள் நடுவதற்காக கொய்யா, நெல்லி, மாதுளை, சீத்தா, ஆப்பிள், சப்போட்டா, பலா, பிஸ்தா, நாவல், லூவி மற்றும் மாமரக்கன்று போன்ற 400 மரக்கன்றுகள் கொள்முதல் செய்து வழங்கும் பணியினை 22.05.2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனம் பெயர்</th><th>தொகை (ரூ.)</th></tr>
<tr><td>1.</td><td>M/s P K M நர்சரி கார்டன்,<br>கும்பகோணம் ரோடு,<br>திருவாரூர்.</td><td>ரூ.60,000/-</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண். 167<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 2. | M/s ஈசா நர்சரி கார்டன்,<br>இளவங்கர்குடி,<br>திருவாரூர். | ரூ.68,000/- |
| 3. | M/s மீயாழ் நர்சரி கார்டன்,<br>அம்மையப்பன்,திருவாரூர். | ரூ.92,000/- |

**அலுவலகக்குறிப்பு:-**

1. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s P K M நர்சரி கார்டன், திருவாரூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கவும், மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**(ஒ/ம்) மன்னை த.சோழராஜன்,பி.இ.,**

**மன்னார்குடி நகர்மன்றம்**

**ஆணையர்,**

**மன்னார்குடி நகராட்சி**

**// உண்மை நகல் //**